# சித்தர் பாடல்களில் சைவ சித்தாந்தத்தின் சாயல்

# The influence of Saiva Siddhantam in Siddhar poem

கோ.வி.சிவபாலன் / G.Sivapalan[1]
சு.மணிமாறன் / S.Manimaran [2]

Date of submission: 2021-11-02
Date of acceptance: 2020-11-20
Date of Publication: 2021-07-20
Corresponding author's Name: S.Manimaran
Email: manimaran23@um.edu.my

## Abstract

*Siddhar* poems are well-known for their uniqueness as well as for the wealth of information about Indian philosophies hidden within those stanzas. Since *Siddhars* share their wisdom in trance, it is impossible to place them under any religious constitution. Generally, these Siddhars are known for their neutral stand and their objectivity towards religion. Their poems are found to be heavily infused with philosophies of *Saiva Siddhantam*. Hence, this paper aims to investigate the influence of *Saiva Siddhantam* in the *Siddhar* poems. Religious generality pertaining to subject, *malam*, four types of birth, and philosophical status are the categories focused in analysing the poems. Analysis yields salient influence of *Saiva Siddhantam* throughout the poems. Rather than contradicting each other, Veganism and the principles of Siddha are seen to be linked to each other. Both principles prescribe to the notion of the existence of the God, His omnipresence, and His endless abilities. However, Veganism and the principles of *Siddha* each has an opposing view regarding obtaining paramountcy with the blessings from God himself.

**Key Words:** Siddhar poems, Saivism, Siddhar principles, Mupporul, Mummalam

## ஆய்வின் பின்புலம்

சைவசித்தாந்தம் தமிழர்களின் தனிப்பெரும் சமயச் சொத்தாகும். சைவசித்தாந்தம் என்பது சிவநெறிக்கென மிகவும் நேர்த்தியாக வரையறுக்கப்பட்ட கோட்பாடு அல்லது சிவநெறியின் முற்றமுடிந்த கருத்து முடிபு ஆகும். சிவநெறி பன்னெடுங்காலமாகத் தமிழ் மண்ணில் திரிபுபடாமல் விளங்கி வருவதற்கு சைவ சித்தாந்தமே அடிப்படைக் காரணமாகும். சித்தர் நெறியும் பன்னெடுங்காலமாகத் தமிழர் வாழ்வியலில் இரண்டறக் கலந்து விளங்கி வருகிறது. சித்தர் நெறியும் சைவநெறியும் இதுநாள்வரை வெவ்வேறு நெறிகளாகவே சமயச் சான்றோர்களால் பொதுமக்களுக்கு அடையாளம் காட்டப்பட்டு வந்துள்ளன. சித்தர் பாடல்கள் யோகநெறியையும் ஞானநெறியையும் முன்னிறுத்துபவை.

மக்களிடம் காணப்படும் மூடநம்பிக்கைகளைச் சாடுகின்ற தன்மையவை. இதன்காரணமாக சைவசித்தாந்திகள் சித்தர் பாடல்களை ஒப்புக்கொள்வதில்லை. ஆனால் சைவத் திருமுறைகளுள் பத்தாம் திருமுறையைப் பாடிய திருமூலர் சித்தர்களுள் ஒருவராகக் கருதப்படுகிறார். இவரது திருமந்திரப் பாடல்கள் யோக, ஞான நெறிகளை

[1] The author is a Senior Lecturer in the Department of Indian studies, University of Malaya, Kuala Lumpur, Malaysia. gsiva_palan@um.edu.my

[2] The author is a Senior Lecturer in the Department of Indian studies, University of Malaya, Kuala Lumpur, Malaysia. manimaran23@um.edu.my

முன்னிறுத்திப் பாடப்பட்டவை. சித்தர் பாடல்களில் காணப்படும் கருத்துச் சாயல்களைத் திருமந்திரத்தில் பரவலாகக் காணமுடியும். அந்த வகையில் சைவ சித்தாந்தமும் சித்தர் நெறியும் அடிப்படையில் ஒத்தக் கோட்பாடுகளை உடையவை எனும் சிந்தனையை மேற்காணும் கருத்து நமக்குள் எழச்செய்கிறது. எனவே சித்தர்பாடல்கள் ஆய்வுக்குட்படுத்தப்பட்டு அவற்றில் சைவசித்தாந்தின் சாயல் எவ்வளவிற்கு இடம்பெற்றுள்ளது என்பது ஆராயத்தக்கது.

### கட்டுரையின் நோக்கம்

சித்தர் பாடல்களையும் சைவசித்தாந்தக் கோட்பாடுகளையும் ஒப்புநோக்கி, சித்தர் பாடல்களில் காணப்படும் சைவசித்தாந்தச் சாயலை ஆராய்ந்து வெளிப்படுத்துவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

### சித்தர் சித்தாந்தமும் சைவ சித்தாந்தமும்

தமிழர் மரபில் முதன் முறையாக இறைவனையும் ஆன்மாவையும் உணர்த்திப் பதி, பசு என்னும் தத்துவத்தைக் குறிப்பாகக் காட்டும் இலக்கியமாகத் திருமுருகாற்றுப்படைத் திகழ்கின்றது. மணிமேகலையில் சைவம் என்னும் பெயருடன் சமயம் குறிக்கப்படுகின்றது. ஆனால் தத்துவக் கருத்துடன் இயைந்த சைவ சமயத்தைக் காண இயலவில்லை. சைவ சித்தாந்தம் என்னும் சொல்லோடு சமயத்தையும் தத்துவத்தையும் இணைத்துக் காட்டும் போக்கில் தோன்றிய முதல் நூல் திருமந்திரமே (இரா.மாணிக்கவாசகம், பக்.27). பதினெண் சித்தரில் ஒருவராக விளங்கி, திருமந்திரம் என்னும் சாத்திரத்தைப் பாடிய திருமூலரே முதல் சைவ சித்தாந்தி. சைவ சித்தாந்தம் என்பதற்குச் சித்தர்கள் பாடிய சிவம் தொடர்பான முடிபு எனப் பொருள் கொள்வது சாலப் பொருந்தும் (மேலது, பக்.29). இக்கருத்துடன் ஆறுமுக நாவலரின் கருத்தும் ஒத்தமைந்துள்ளது. "பின் வந்த பக்தி இயக்கம் காரணமாகத் தோன்றிய சமயம் தொடர்பான நம்பிக்கை, வழிபாட்டுமுறை, கற்பனை கலந்த கதைகள் அனைத்தும் சித்தர்கள் கண்ட சித்தாந்தத்தை உருமாற்றம் செய்தன. சாத்திரங்கள் பதினான்கின் தோற்றம் புதிய சைவ சித்தாந்தத்துக்கு வழி கோலியது. காலப்போக்கில் சித்தர்களின் கொள்கையினின்று வேறுபடுத்தப்பட்டது;புதிய விளக்கங்கள் தரப்பெற்றன" (கே.ஆறுமுக நாவலர், பக்.46). மேற்காணும் அறிஞர்களின் கருத்தை நோக்க ஒரு புதுக்கருத்து பிறக்கிறது. ஆதியில் இருந்த சித்தர்நெறியே பின்னாளில் சைவ சித்தாந்தமாகத் திரிபு கண்டது என்பதே அப்புதுக்கருத்தாகும். அவ்வாறாயின் சித்தர்பாடல்களில் சைவசித்தாந்தச் சாயலும் சைவசித்தாந்தத்தில் சித்தர்நெறிச் சாயலும் பரவலாக இடம்பெற்றிருப்பது இயல்பே. இனி சித்தர் பாடல்களில் காணப்படும் சைவசித்தாந்தச் சாயல்களை இக்கட்டுரை ஆராய்ந்து முன்வைக்கிறது.

சைவ சித்தாந்தம் பிற சமயக் கருத்துகளையும் துணிபுகளையும் ஏற்பதும் இல்லை வெறுத்தொதுக்குவதும் இல்லை. பிற சமயத்தவர்கள் முழு உண்மையைக் காண்பதில்லை என்றும் அவ்வளர்ச்சி நிலையை எய்திய பின்னர் உண்மையான சைவ சமயத்தை அவர்கள் ஏற்பார்கள் என்னும் கொள்கையை சைவ சித்தாந்தம் கொண்டுள்ளது. இதனைச் சமரசம் அல்லது வரிசை நோக்கு எனக் குறிப்பர் (க.வச்சிரவேலு முதலியார், பக்.171). ஆனால் சித்தர் பாடல்கள் சமயப் பொதுமையை வலியுறுத்துவன; மெய்ப்பொருளான பரம்பொருள் ஒன்றே என்னும் கொள்கையுடையன. இவை மெய்ப்பொருளினின்று விலகி உருவ வழிபாட்டின் ஆரவாரங்களையும் உண்மையை மறைக்கும் சாத்திரங்களையும் சடங்குகளையும் சாடினவே அன்றி எச்சமயத்தினரையும் சாடுவன அல்ல.

### உள்ள பொருள்

சைவ சித்தாந்தம் இறை, உயிர், தளை என்னும் மூன்று பொருள்களும் என்றும் உள்ள பொருள்கள் என்னும் கொள்கையையுடையது. இறை என்பது உயிர், தளை என்னும் இரு பொருள்களுக்கும் ஆதாரமாய், அவை தன்னுடைய நிறைவில் அகப்பட்டு நிற்கும்படி உள்ள முழு நிறைவுப் பொருளாகும். உயிர் என்பது இறை

அறிவிக்க அறிந்தும் இயக்க இயங்கியும் வரும் அறிவுடையப் பொருளாகும். அவ்வுயிரின் ஆற்றலையும் பல்வேறு வகையில் மறைத்து நிற்கும் பகைப்பொருள் தளை எனப்படும். இத்தளை, உயிர்களை இறைவனிடமிருந்து மறைக்கும் ஆற்றலற்றது. இறையறிவு ஞாயிற்றின் ஒளி போன்றது;தானே தனித்து அறிவது;உயிர்களையும் அறிவிக்க வல்லது. உயிர்களின் அறிவு சார்ந்ததன் வண்ணமாய் நின்று அறிவது. அத்தளை கண்ணின் காணுந்தன்மையை மறைக்குமே அன்றி ஞாயிற்றை மறைக்காது. உயிர்களுக்கு இயல்பாக நேர்ந்துள்ள இக்குற்றத்தை அகற்றி, அவற்றுக்குப் பேரின்பம் வழங்கவே இறைவன் உலகப் படைப்பை மேற்கொள்கின்றான்.

படைப்பெனப்படுவது உயிர்களுக்கு உடலையும் அதன்கண் உள்ள கருவிகளையும்; உலகையும் உலகில் உள்ள நுகர்ச்சிப் பொருள்களையும் அவ்வவற்றிற்கேற்றபடி அமைத்துக் கொடுத்தலாகும். இப்படைப்பை இறைவன் இன்மையினின்றும் தோற்றுவித்தான் எனச் சைவ சித்தாந்தம் கொள்வதில்லை. அது, உள்ளதில் இருந்தே உள்ளது தோன்றும் என்னும் கொள்கையுடையது. இதுவே சற்காரிய வாதம் எனப்படுகின்றது. அதாவது, சத்துஉள்ளது, காரியம்ஆக்கப்பட்டது, வாதம் பேச்சு. களிமண்ணாகிய உள்ள பொருளில் இருந்து குடமாகிய உள்ள பொருள் உருவாகும். இவ்வுண்மையின்படி உலகத்துக்கு முதற்காரணமாய் உள்ள பொருள் மாயை எனப்படுகின்றது. எல்லாப் பொருள்களும் தம் உருக்குலைந்து அணு எனப்படும் நிலையினும் நுணுகி ஆற்றலுருவாகி நிற்கும் நிலையே மாயையாகும் (க.வச்சிரவேலு முதலியார், பக்.171).

சித்தர்கள், உயிரை உள்ளபொருள் என்பதுடன் அவ்வுயிர் நிலைப்பெற்றிருக்கும் உடலையும் நிலைத்தப் பொருளாகக் கொள்வர். அவ்வுடலை அழியாமல் காக்கவும் ஆற்றலுடையவர்களாக இருந்தனர். இவர்கள் உடலில் உத்தமன் கோயில் கொண்டுள்ளான் என உணர்ந்து உடலைப் போற்றியவர்கள். ‘ஊத்தை உடலென்று எண்ணாதே உப்பிருந்த பாண்டம் என்று எண்ணாதே’ எனக் கூறியவர்கள் சித்தர்கள். சைவ சமயத்தோர் உயிர் மட்டுமே இறைவனின் திருவடியைச் சேரும் என்பர். ஆனல் உயிர் துறவாமலே, உடலுடன் இறைவனைக் கலக்கலாம் என்பதை,

*‘சாங்கால மில்லாமற் றானணுவோடே*

*சட்ட திட்டமாய்ச் சேர்ந்து....’ (பெரிய ஞானக் கோவை 116:216)*

எனப் பாம்பாட்டிச் சித்தர் கூறுகின்றார். மேலும், இறைவன் தன் உடலுக்குள்ளே இருப்பதை உணராமல் பல இடங்களிலும் தேடுபவர்களைச் சித்தர்கள் சாடுகின்றனர்.

*‘இந்த விதத்திலே தேகத்திலே தெய்வம்*

*இருக்கையில்.....’ (பெரிய ஞானக் கோவை 38:329)*

எனவும்,

*‘தன் வீடிருக்க அசல் வீடு போகாதே*

*தாயார் தகப்பனை வையாதே*

*உன் வீட்டுக்குள்ளேயே யூகமிருக்கையில்*

*ஓடித்திரிகிறாய் வாலைப் பெண்ணே’ (பெரிய ஞானக் கோவை 93:336)*

எனவும், உயிரானது உள்ள பொருள் மட்டுமன்று, அகத்திலே இறைவனைக் கொண்டுள்ள பொருளும் ஆகும் என்று கொங்கணச் சித்தர் விளக்குகின்றார்.

**மலம்**

உலகத்தையும் அதற்குக் காரணமாகிய மாயையினையும் சைவசித்தாந்தத்தில் உயிரின் அறிவை விளக்கும் பொருளாகவே கொள்வார்கள். இவர்கள், உயிரின் அறிவை மறைப்பது மூல மலம் என அதனை வேறொன்றாகவே வைத்துக் கூறுவர். மலமும் மாயையும் அழுக்கு எனப்படினும், மலம் செம்பில் உள்ள களிம்பு போன்ற இயற்கை அழுக்கு.; மாயை என்பது அதை நீக்குவதற்குப் பயன்படும் புளியும் சாம்பலும் போன்றது. இரண்டு அழுக்கும் அருள் ஞானம் எனும் நீரால் கழுவப்படும். சித்தர்களின் பாடல்களில் மலம், மாயை ஆகியவற்றின் தன்மைகள் விளக்கப்பட்டுள்ளன. மலத்தைப்

போக்குவது அரிய செயல் என்பதனை,

*'நாறுமீனப் பலதரம் நல்ல தண்ணீரால்*

*நாளுங் கழுவினுமதன் நாற்றம் போமோ*

*கூறுமுடல் பலநதியாடிக் கொண்டதால்*

*கொண்டமலம் நீங்கா தென்றாடாய்ப் பாம்பே'* (பெரிய ஞானக் கோவை 65:208)

எனப் பாம்பாட்டிச் சித்தர் விளக்குகின்றார். இக்கன்ம மலத்தை மாடுகளாக இடைக்காடர் கூறுகின்றார் (பெரிய ஞானக் கோவை 121:236). கன்ம மலம் பெற்ற உடலின் தன்மையை,

*'காய்த்தமரமது மிக்க கல்லடிபடும்*

*கன்மவினை கொண்ட காயம் கண்டனைப் பெறும்*

*வாய்த்த தவமுடையவர் வாழ்பவரென்றே*

*வத்துத் திருவடி தொழுதாடாய்ப் பாம்பே'* (பெரிய ஞானக் கோவை 66:208)

எனப் பாம்பாட்டிச் சித்தர் விளக்குகின்றார். இவ்வாறாக, மலத்தின் தன்மையை உணர்ந்து அம்மலத்தினின்று மீளும் வழியினையும் சித்தர்கள் அறிந்திருந்தனர்.

### நால்வகைப் பேறு

சைவ சித்தாந்தம் நால்வகைப் பேறுகளை விளக்குகின்றது. அவை இறையுலகில் இருக்கும்பேறு, இறைவனருகில் இருக்கும் பேறு, இறைவனை ஒத்த நிலையைப் பெறும்பேறு, இறைவனுடன் கலக்கும்பேறு என்பனவாகும். இவற்றை முறையே சாலோகம், சாமீபம், சாரூபம், சாயுச்சியம் என்பர். இவற்றுள் இறைவனுடன் ஒன்றும் சாயுச்சிய நிலையினையே சித்தர் பாடல்களில் பெரிதும் காண முடிகின்றது. யோக நிலையினில் நின்று எண்வகைச் சித்திகளைப் பெற்று சாயுச்சிய நிலையினை அடையும் முறையினைப் பல சித்தர் பாடல்கள் விளக்குகின்றன. இறையுலகில் இருக்கும் பேற்றினை,

'இருக்கலாம் எந்தெந்த யுகங்களுக்கும்

*ஏகாந்தமானதொரு பரமந் தன்னில்'* (பெரிய ஞானக் கோவை 51:774)

எனக் காகபுசுண்டரும்,

*'தெளிவுறு ஞானியா ரோட்டுங் கப்பல்*

*சீர்பாதஞ் சேர்ந்ததென் றாடாய்ப் பாம்பே'* (பெரிய ஞானக் கோவை 114:216)

எனப் பாம்பாட்டிச் சித்தரும் விளக்குகின்றார். இறைவனது அருகில் இருக்கும் பேற்றினை,

*'வீறுபெருங் கடவுளை எங்களுடனே*

*விளையாடச் செய்குவோமென் றாடுபாம்பே'* (பெரிய ஞானக் கோவை 34:204)

என இறைவனது அருகில் இருப்பதோடு அவனோடு விளையாடும் பேற்றையும் பெற்றவர்கள் சித்தர்கள் எனப் பாம்பாட்டிச் சித்தர் சுட்டுகின்றார். அவ்விறைவனை ஒத்த நிலையைப் பெறும் சாரூப நிலையை,

*'வேதன் செய்த சிருட்டிகள்போல் வேறுசெய்குவோம்*

*வேந்தனையு மெங்கள் கீழே மேவச் செய்குவோம்*

*நாதனுடன் சமமாக நாங்களும் வாழ்வோம்'* (பெரிய ஞானக் கோவை 32:203)

எனக் குறிக்கும் சித்தர்கள், இறைவனோடு கலக்கும் பேற்றை,

*'ஒன்றோடொன்று கூடில் அகப்பேய்*

*ஒன்றுங் கெடுங்கோனே*

*நின்ற பரமசிவமும் அகப்பேய்*

*நில்லாது கண்டாயே'* (பெரிய ஞானக் கோவை 87:249)

எனக் குறிப்பிடுகின்றார்கள். இதனால் அகத்திலே உறையும் இறைவனை உணர்ந்து அவனோடு ஒன்றும் நெறியை அறிந்தவர்கள் சித்தர்கள் என்னும் உண்மை புலப்படுகின்றது.

### தாதான்மிய நிலை

உயிருடன் ஒன்றாக நிற்கும் இறைவன் தன்னிலையில் இரண்டாக இருக்கின்றான். இறைவனும் இறைவனது ஆற்றலும் குணி,குணம் என இரு

திறப்படும்.பிரிக்கமுடியாத ஒரு பொருள் இருதன்மைப்பட்டு நிற்பதே தாதான்மியம் எனப்படும். இறைவன் தன்னிலையில் யாதொரு நிலை மாற்றமும் பெறாமல் தன்னிடமிருந்து பிரிக்க முடியாத ஆற்றலைக் கொண்டு ஐந்தொழிலையும் நிகழ்த்துவதை இது குறிக்கும். இறைவனையும் அவனது ஆற்றலையும் சிவனும் சக்தியுமாகச் சைவ சித்தாந்தம் கூறுகின்றது. இறைவனின் சங்கற்பமே சக்தி. இதனை, 'எத்திறம் நின்றான் ஈசன், அத்திறம் அவளும் நிற்பள்' (சிவஞான சித்தியார், 1968, பா.75) என்கின்றது சித்தியார். இப்படி, ஒன்றாகிய இறைவன் குணியாகவும் குணமாகவும் இரு திறமாகச் செயல்படுவதே தாதான்மியம் எனப்படுகின்றது. இறைவனுடைய ஆற்றலாகிய குணம் சித்தர் பாடல்களில் வாலை, சக்தி, மனோன்மணி எனும் பெயர்களில் அழைக்கப்பெறுகின்றது. 'நாமறியோ மவனவளும் ஒன்றே ஒன்றே' (பெரிய ஞானக் கோவை 37:711) என அறுதியிட்டுச் சிவனும் சக்தியுமே இறைவனாகிய குணியும் இறைவனது ஆற்றலாகிய குணமுமாகும் என்பர் சித்தர்.

சித்தர்கள், குணியும் குணமுமாக விளங்கும் இறைவனையும் அவனது ஆற்றலையும் அகத்திலே கண்டவர்கள். அவர்கள் உட்கொள்கின்ற காற்றிலே ஒன்றைச் சிவமாகவும் மற்றதைச் சக்தியாகவும் கண்டவர்கள் (பெரிய ஞானக் கோவை 79:723). அகத்திலே இருக்கும் குணம் குணி இரண்டையும் தங்களது யோக நெறியினால் வெளிக்கொணர்ந்து அளவற்ற ஆற்றலைப் பெற்றவர்கள் சித்தர்கள். இவ்வாற்றலே சித்திகள் எனப்படுகின்றன. இவ்வாறு வாலையாகிய சக்தியையும் பரம்பொருளாகிய சிவனையும் தம்முள்ளே குணமும் குணியுமாகக் கண்டவர்கள் சித்தர்கள்.

### முடிவுரை

சைவநெறியையும் சித்தர்நெறியையும் ஆழமாக ஒப்பிடப் புகுந்தால் அது மிகப் பெரிய ஆய்வாக அமைந்துவிடும். இக்கட்டுரையில் சமயப் பொதுமை, உள்ள பொருள், மலம், நால்வகைப் பேறு, தாதான்மிய நிலை ஆகிய கூறுகள் மட்டுமே ஒப்பீட்டு முறையில் ஆராயப்பட்டுள்ளன. இவ்வொப்பீட்டை அடிப்படையாகக் கொண்டு பார்க்கும்போது சித்தர்களுடைய பாடல்களில் சைவசித்தாந்தத்தினுடைய சாயல் பரவலாகப் படிந்திருப்பது புலனாகின்றது. சைவநெறியும் சித்தர்நெறியும் ஒன்றுக்கொன்று பெரிதும் முரணாக இல்லாமல், ஒன்றோடொன்று தொடர்புடையனவாக அமைந்துள்ளன. சித்தர்நெறி எந்தவொரு தனிக்கடவுளையும் குறிப்பிடவில்லை;எந்த மதத்தையும் சார்ந்திருக்கவில்லை. சித்தர்களின் சித்தாந்தம் பொதுவானது;தொன்மையானது. இறைவன் ஒருவன் உளன்; அவன் எல்லாமாகவும், எங்கும் நிறைந்தவனாகவும், எல்லாம் வல்லவனாகவும் இருக்கின்றான் என்னும் கருத்தில் சைவநெறியும் சித்தர்நெறியும் உடன்படுகின்றன. அகத்திலே நிறைந்த அவனை வழுத்தி அவன் அருளாலே அவனாகவே ஆகும் இறைநிலையை எய்துதல் வேண்டும் என்னும் கருத்தில் அவை வேறுபடுகின்றன.

## References

Āṟumuka Nāvalar, Ke̅ & Kumarēcaṉ, A. (1987).*Intumata iṇaippu viḷakkam*. Nākarkōvil , Pārati Accakam.

Arun:akirinha:tha Cuva:Mikal:. (1993). *Thirumutaith thirat:t:u.* Chennai, Kanchipuram Nha:kalingka Munivar,

Aruṇanti Civācāriyar; Irāmanātapiḷḷai Pa (1968). *Civañāṉa Cittiyār parapakkam Tattuvappirakācar uraiyuṭaṉ.*, Chennai , Tenntiya Caivacittānta Nūṟpatippukkaḻakam.

Caravaṇamuttup Piḷḷai, Vā. (1927) *Patiṉeṉ cittarkaḷ aruḷiya periya* ñāṉakkōvai. Chennai,

Ratna Nayakar & Sons.

Ganesan, T. "Schools of ***Śaivasiddhānta***." In ***Śivajñānabodha****: With the Laghuṭīkā of Śivāgrayogī*. By T. Ganesan, vii–xxvii. Chennai, India: Śrī Aghoraśivācārya Trust, 2003.

Govindhan, S. (2006). Barriers to spiritual fulfillment found in Siddhartha songs and ways to dispose of them. *Journal of Indian Studies 9*, 40-49.

Janakiraman, I. (2021). The Concept of God in Siddha Literature. *International Research Journal of Tamil*, *3*(S-2), 201-206.

Ka. Nha:ra:yan:an. (1990), *Ciththar thaththuvam,* Chennai, Thamil-p Puththaka:layam.

Man:iyan, Pa. Cu. (1999). *Ciththar nhetikal:um ciththi mutaikal:um.* Coimbotore, Vijaya Publication,

Māṇikkavācakam, Irā. (1982). *Nam nāṭṭuc cittarkaḷ.* Chennai, Aṉṉai Apirāmi Aruḷ.

Māṇikkavācakam,irā. (1977). *Tirumantira* ārāycci. Cheṉṉai, Aṉṉai apirāmi aruḷ.

Mudaliar, K. V. (1983). *Caiva cittāntattiṉ taṉic ciṟappukaḷ*. Madurai, Kamaraj University.

Mudaliar, K. V. (1985). *Sivajnana Mapadiyam.* Madurai, Kamaraj University.

Parimēlaḻakar. *(2010)Thirukkural: parime:lal-akar urai*. 3rd ed, Madras , Thirumakal: Nhilaiyam

Rajantheran, M., Gill, S. S., Muniapan, B., Silllalee, K., & Manimaran, S. (2014). A critical analysis of siddha tradition in the context of Malaysian Hindu culture. *Life Sci J*, *11*(7).

Roopa, M. (2021). The Theological Priciples of Siddhar and Vallalar Songs. *International Research Journal of Tamil*, *3*(S-2), 107-111.

Savundranayagam, E. (1992). Philosophy of God in Saiva Siddhantham.

Sivapalan, G. (2013). Siddha Medicine as Descripted in Siddhar Literature. *Journal of Indian Studies, 10*(Special), 38-42.

Sivapalan, G., & Manimaran, S. (2021). Harmony beyond Religion in Siddhar and Sufi Literatures. *Journal of Tamil Peraivu*, *10*(1), 23-29.

Thangavelu, M. K. (1981). The philosophy and teachings of saint arunagirinathar with special reference to kandar anubhuti. http://hdl.handle.net/10603/139988

U.Ve:. Ca:minha:thaiyar. (1956).*Ci:ththalaic Ca:ththana:r- Man:ime:kalai* , Madras, U.Ve:. Ca:minha:thaiyar Nhu:l Nhilaiyam.

Vijayakumar, B. (2021). Theological principle and doctrine emphasized by Thiruvarutha. *International Research Journal of Tamil*, *3*(S-2), 222-227.